# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group VIIB & VIII **தேர்வு** |
| பாடம் | : | **இந்து மதம்** |
| பகுதி | : | **<u>இதிகாச புராணங்கள்</u>** |

**காப்புரிமை**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி** VIIB & VIII **தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள்,ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.**

**எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.**

**ஆணையர்**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## இதிகாசம்:

- இதிகாசம் என்பதற்கு – ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு என்று பொருள்.
- வேத உபநிடதங்களின் உட்பொருளை அடக்கிக் கதை வடிவத்தில் இவை எழுதப்பட்டுள்ளன.
- இராமாயணமும், மகாபாரதமும் இதிகாசங்களாகும்.
- இராமாயண காவியத்தை இயற்றியவர் வால்மீகி முனிவர் ஆவார்.
- இதில் அரசநீதி, சத்யபரிபாலனம், புத்திரர் கடமை, பெரியோர் வழிபாடு, கற்பு நெறியின் மேன்மை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.
- மகாபாரதத்தை இயற்றியவர் வியாச முனிவர்.
- இதை ஐந்தாம் வேதம் என்றும் சிறப்பித்துக் கூறுவர்.
- இதில் இல்லாதது வேறு எங்கும் சொல்லப்படவில்லை என்ற சிறப்பினையுடையது.
- ஞான நூல்களில் சிறந்த பகவத் கீதை இதனுள் அடங்கி இருக்கிறது.
- இந்த இரு இதிகாசங்களும் தர்ம, அதர்மப் போராட்டத்தில் தர்மமே முடிவில் வெற்றி பெறும் என்பதை நன்கு விளக்கிக் கூறியுள்ளன.

## புராணங்கள்:

- புராணம் என்பதற்கு பழைய வரலாறு என்பது பொருள்.
- இதனை எழுதியவர் வேத வியாஸர். இதனை உலகிற்கு அளித்து உதவியவர் சூதபுராணிகர்.
- புராணங்கள் பதினெட்டாகும்.

| சிவபுராணங்கள் - 10 | |
|---|---|
| 1. | சைவம் |
| 2. | பவிஷ்யம் |
| 3. | மார்க்கண்டேயம் |
| 4. | இலிங்கம் |
| 5. | ஸ்காந்தம் |
| 6. | வராகம் |
| 7. | வாமனம் |
| 8. | மச்சம் |
| 9. | கூர்மம் |
| 10. | பிர்மாண்டம் |
| விஷ்ணு புராணங்கள்- 4 | |
| 1. | காருடம் |
| 2. | நாரதீயம் |
| 3. | வைஷ்ணவம் |
| 4. | பாகவதம் |
| பிரமன் - 2 | |
| 1. | பிர்மம் |
| 2. | பதுமம் |
| அக்கினி-1 | |
| 1. | ஆக்னேய புராணம் அக்கினியையும் |
| சூரியன்-1 | |
| 1. | பிரம கைவர்த்தம் சூரியனையும் சார்ந்தவை |

- வேதம் ”ஸத்யம்வத , தர்மம்சர ” என்று கூறுகிறது. இதன் பொருள் ”உண்மையைப் பேசு, தர்மத்தைச் செய் என்பதாகும்.
- இத்தகைய வேதக் கட்டளைகளைப் புராணங்கள், கற்றோரும், மற்றோரும் நன்கு அறிந்து கடைபிடித்து உய்யுமாறு சுவையான நீதிக்கதைகளால் விளக்குகின்றன.

------*********------*********------